வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3898/ஆ2/2024 நாள்: 07.04.2025

பொருள்: பள்ளிக்கல்வி வேலூர் மாவட்டம் ப்ரி மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை மாணவர்களின் விவரங்களை EMIS வலைத்தளத்தில் சரிபார்த்தல்–சார்பாக.

பார்வை: சென்னை–06, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.062956/எம்2/இ3/2024 நாள்: 01.04.2025

-------

பார்வையில் காணும் பள்ளி கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர் ஒரு வார காலத்திற்குள் மாணவர்களின் தகவல்களை EMIS வலைதளத்தில் விவரங்களை மீண்டும் சரிபார்க்க வேண்டியிருப்பின் உடனடியாக உரிய விவரங்களை சரிசெய்திடவும், மேலும் , 8, 9, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் விவரங்களை EMIS வலைதளத்தில் "Student profile" update சரியாக உள்ளதை அந்தந்த வகுப்பாசிரியர் மூலம் உறுதி செய்து கொள்ளவும் அந்தந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

அந்தந்த பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் விவரங்களை (ஆதார் சீடிங் செய்யப்பட்ட வங்கிக் கணக்கு விவரங்கள் உட்பட) EMIS வலைதளத்தில் சரியான பதிவுகள் மேற்கொள்வதன் மூலம் மாணவர்களுக்கு உரிய நேரத்தில் கல்வி உதவித் தொகை கிடைக்க வழிவகை செய்ய சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பார்வையின் படி– நகல்.

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ)
வேலூர்

பெறுநர்
அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்
வேலூர்.

நகல்
பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner